C.C.No.206/2013
Dated :3.02.2020
அசா.2, ரத்தினவேல்
முதல் விசாரணை

நான் தற்போது மல்லாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் மற்றும் கான்ராக்டராக செய்து வருகிறேன். கடந்த 1.3.2013ம் தேதி மாலை 4.45 to 5.00 மணி வரை நான் எனது தோட்டத்தில் இருந்தபோது அப்போது தருமபுரியிலிருந்து வந்த ஸ்ரீ வெங்கடேஷ்வரா கல்லூரி பேருந்தும், பென்னாகரம் பக்கமிருந்து வந்த ஜெயம் கல்லூரி பேருந்தும் நேருக்கு நேராக மோதி விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் இரண்டு பேருந்துகளிலும் 4 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. சுமார் 30 மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டது. அடிப்பட்ட நபர்களுக்கு தண்ணீர் கொடுத்தோம். 108 ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மறுநாள் சம்பவ இடத்தில் பென்னாகரம் துணை காவல் கணகாணிப்பாளர் அங்கு வந்து வரைபடம் வரைந்து என்னை சாட்சியாக இருக்க கேட்டதால் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆகம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் கு.வி.

விபத்து நடந்த இடத்தின் அருகில் உள்ள தோட்டத்தில் நான் விவசாய வேலை செய்து கொண்டிருந்தேன். விபத்து நடந்த இடத்திற்கும் நான் வேலை செய்த இடத்திற்கம் 50 மீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடந்த பிறகு தான் நான் சம்பவத்தை பார்த்தேன் என்றால் விபத்து நடந்த உடன் போய் பார்த்தேன். ஜெயம் கல்லூரி பேருந்தும், ஸ்ரீவெங்கடேஷ்வரா கல்லூரி பேருந்தும் மோதிக்கொண்டது. ஜெயம் கல்லூரி பேருந்து பென்னாகரத்திலிருந்து தருமபுரி நோக்கி சென்றது. ஸ்ரீவெங்கடேஷ்வரா கல்லூரி பேருந்து தருமபுரியிலிருந்து பென்னாகரம் நோக்கி சென்றது. எந்தெந்த பேருந்துகளை எந்த ஓட்டுநர்கள் இயக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் ஜெயம் கல்லூரி பேருந்து ஓட்டுனர் கவனத்தோடு ஓட்டினால் விபத்தை தடுத்திருக்கலாம். அதே போல் எதிர்திசையில் வந்த வாகனத்தின் ஓட்டுநர் எதிரே வந்த வாகனத்தை பார்த்து நிறுத்தியிருந்தால் விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் சரிதான். ஸ்ரீவெங்கடேஷ்வரா கல்லூரி பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் அவர் பாதையில் சரியாக தான் வந்தார் என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்ன எழுதியருந்தது தெரியுமா என்றால் தெரியும். மறுநாள் விசாரித்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து போட்டேன் என்றாலும், எனக்கு வேறு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல

*1*ம் எதிரி தரப்பில் கு.வி.

வாய்ப்பளித்தும் இல்லை.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
தருமபுரி.

C.C.No.206/2013
Dated :3.02.2020
அசா.3, அருணாசலம்
முதல் விசாரணை

நான் தற்போது சிருகலூரில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2.3.2013ம் தேதி மதியம் 3.00 மணி அளவில் மல்லாபுரம் அருகே விபத்து பென்னாகரம் காவல் துணை கண்காணிப்பாளர் வந்து வரைபடம் வரைந்து என்னை சாட்சியாக இருக்க கேட்டதால் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். பார்வை மகஜரில் இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் கு.வி.

விபத்து நடந்த மறுநாள் நான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா என்றால் தெரியாது.

1ம் எதிரி தரப்பில் கு.வி.

வாய்ப்பளித்தும் இல்லை.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
தருமபுரி.